# கிறிஸ்துவைப் போன்ற ஒரு ஆசிரியராக மேம்படுதல்—ஒரு தனிப்பட்ட மதிப்பீடு

*ஆசிரியர்களாகிய நாம், நமது பலங்களையும் பலவீனங்களையும் தவறாமல் மதிப்பீடு செய்ய வேண்டும், இதன் மூலம் கற்பவர்கள் இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தை வளர்த்து, அவரைப் போல் ஆக நம்மால் உதவ முடியும். கிறிஸ்துவைப் போன்ற போதனையின் கொள்கைகளைப் பயன்படுத்துவ தற்கு பின்வரும் செயல்பாடு உங்களுக்கு உதவும். பின்வரும் வாசகங்கள் ஒவ்வொன்றும் உங்களை ஒரு ஆசிரியராக எவ்வளவு சிறப்பாக விவரிக் கிறது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். ஒவ்வொரு வாசகத்துக்கும் மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்: (1) அரிதாக, (2) சில நேரங்களில், (3) அடிக்கடி, (4) கிட்டத்தட்ட எப்போதும்.*

*பின்னர், ஆவியானவரால் வழிநடத்தப்பட்டபடி, நீங்கள் மேம்படுத்த விரும்பும் சில காரியங்களை ஜெபத்துடன் தேர்ந்தெடுக்கவும். சில இலக்குகளை அமைத்து, மேம்படுத்துவதற்கு இந்த ஆதாரத்தைப் பயன்படுத்தவும்.*

## இயேசு கிறிஸ்துவில் கவனம் செலுத்துங்கள்

____ *நான் என்ன கற்பித்தாலும் இயேசு கிறிஸ்துவைப்பற்றி கற்பிக்கிறேன்.*

____ *இயேசு கிறிஸ்துவின் எடுத்துக்காட்டை நான் வலியுறுத்துகிறேன்.*

____ *தங்களுடைய் வாழ்க்கையில் கர்த்தருடைய அன்பை, வல்லமையை மற்றும் இரக்கத்தை அடையாளம் காண கற்பவர்களுக்கு நான் உதவுகிறேன்.*

____ *பரலோக பிதாவிடமும் இயேசு கிறிஸ்துவிடமும் தங்களுடைய உறவைப் பெலப்படுத்த கற்பவர்களுக்கு நான் உதவுகிறேன்.*

____*அதிகமாக இயேசு கிறிஸ்துவைப் போலிருக்க மனமுவந்து முயற்சி செய்ய கற்பவர்களுக்கு நான் உதவுகிறேன்.*

## நீங்கள் கற்பிப்பவர்களை நேசியுங்கள் .

____ *கற்பவர்களை தேவன் எப்படிப் பார்க்கிறாரோ அவர்களை  அப்படிப் பார்க்க நான் முயற்சி செய்கிறேன்.*

____ *நான் கற்பிப்பவர்களின் சூழ்நிலைகள், தேவைகள் மற்றும் பெலங்களை புரிந்துகொள்ள, அவர்களை அறிந்துகொள்ள  நாடுகிறேன்.*

____ *பெயர் சொல்லி நான்  கற்பவர்களுக்காக ஜெபிக்கிறேன்.*

____ *அங்கு அனைவரும் மதிக்கப்படுகிறார்கள் மற்றும் அவர்களின் பங்களிப்புகள் மதிக்கப்படுகின்றன என்பதை அறிகிற, பாதுகாப்பான சூழலை நான் உருவாக்குகிறேன், .*

____ *என் அன்பை வெளிப்படுத்த பொருத்தமான வழிகளை நான் கண்டு பிடிக்கிறேன்.*

## பரிசுத்த ஆவியால் கற்பியுங்கள்

____ *கற்பிக்க ஆவிக்குரிய ரீதியில் என்னை நான் ஆயத்தப்படுத்துகிறேன்.*

____ *கற்பவர்களின் தேவைகளைப்பற்றிய ஆவிக்குரிய தூண்டுதல்களுக்கு நான் பதிலளிக்கிறேன்.*

____ *பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்படுவதற்கான அமைப்புகளையும் வாய்ப்புகளையும் கற்பவர்களுக்கு நான் உருவாக்குகிறேன்.*

____ *தனிப்பட்ட வெளிப்பாட்டைத் தேட, அடையாளம் காண மற்றும் செயல்பட கற்பவர்களுக்கு நான் உதவுகிறேன்.*

____ *நான் அடிக்கடி சாட்சியமளிக்கிறேன், மேலும் தங்கள் உணர்வுகள், அனுபவங்கள் மற்றும் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ள கற்பவர்களை நான் ஊக்குவிக்கிறேன்.*

## கோட்பாட்டைப் போதிக்கவும்

____ *இயேசு கிறிஸ்துவின் கோட்பாட்டை நானே கற்றுக்கொள்கிறேன்.*

____ *வேதங்களிலிருந்தும் பிற்கால தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளிலிருந்தும் நான் கற்பிக்கிறேன்.*

____ *கற்பவர்களுக்கு வேதங்களிலுள்ள சத்தியங்களைத் தேடவும்,அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும் நான் உதவுகிறேன்.*

____ *மனமாற்றத்திற்கு வழிவகுக்கும் மற்றும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தை வளர்க்கும் சத்தியங்களில் நான் கவனம் செலுத்துகிறேன்.*

____ *இயேசு கிறிஸ்துவின் கோட்பாட்டில் தனிப்பட்ட தொடர்பைக் கண்டறிய கற்பவர்களுக்கு நான் உதவுகிறேன்.*

## கருத்தாய் கற்குமாறு அழையுங்கள்

____ *கற்பவர்கள் தங்கள் கற்றலுக்கான பொறுப்பை ஏற்க நான் உதவுகிறேன்.*

____ *தினமும் சுவிசேஷத்தைப் படிப்பதன் மூலம் இரட்சகரை அறிந்துகொள்ளும்படி கற்பவர்களை நான் ஊக்குவிக்கிறேன்.*

____ *கற்றுக்கொள்ள ஆயத்தமாகுமாறு கற்றுக்கொள்பவர்களை நான் அழைக்கிறேன்.*

____ *அவர்கள் கற்றுக் கொள்ளும் சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ள கற்பவர்களை நான் ஊக்குவிக்கிறேன்.*

____ *அவர்கள் கற்றுக்கொண்டதின்படி வாழ கற்றுக்கொள்பவர்களை நான் அழைக்கிறேன்.*